DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.
CC. No.5 of 2018
Prosecution witness : LW -8/PW-8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வசந்த் | Caste | : | |
| Fathers Name | : | வடிவேல் | Calling | : | |
| Village | : | சத்தியவேடு | Religion | : | |
| Taluk | : | | Age | : | 36 |

(Accused called present. )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2024

முதல் விசாரணை நேரம் 12.30

1. நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன்.

2. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

3. என்னிடம்காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களிலும் கைப்பற்றுதல் மகசர்களிலும் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். எதற்காக போட்டுக் கொடுத்தேன் என்றால் ஊத்துக்கோட்டை அண்ணாசிலை அருகே வைத்து நான் ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்த போது போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன் என்னிடம் காட்டப்படும் சரவணன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. வசந்த் என்பவரது கையொப்பம் அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

4. என்னிடம் காட்டப்படும் சரத் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. வசந்த் என்பவரது கையொப்பம் அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

5. என்னிடம் காட்டப்படும் ஜெயராஜ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. வசந்த் என்பவரது கையொப்பம் அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.அதில் உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. வசந்த் என்ற கையொப்பங்கள் முறையே அசாஆ 11 மற்றும் அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

6. போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

7. அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அரசு சாட்சி பிறழ் சாட்சியாக

அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றது.

8. கடந்த 5.12.2017 காலை 10மணிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக ஊத்துக்கோட்டை சோதனை சாவடி அருகே வைத்து போலீசார் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்தபோது எதிரிகள் எந்தவித அச்சுறுத்தலோ வழுக்கட்டாயமோ இல்லாமல் தானே முன்வந்து அளித்த வாக்குமூலங்களிலும் இந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் போலீசார் வழக்கு சொத்தை கைப்பற்றும் போது தயார் செய்த கைப்பற்றுதல் மகசர்களிலும் சாட்சி கையொப்பம் செய்து விட்டு தற்போது இவ்வழக்கின் எதிரியை காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

விசாரணை முடிவுற்ற நேரம் 12.42.